செ. கு. எண்: 317 நாள் :04.12.2013

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின்

அறிக்கை – 4.12.2013

மதுரை மாவட்டம், V.சத்திரப்பட்டி காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. முத்துக்குமார் அவர்கள் 14.10.2013 அன்று தனது இரு சக்கர வாகனத்தில் டி.கல்லுப்பட்டி, கருப்புக்கோவில் அருகே சென்று கொண்டிருந்த போது ஏற்பட்ட சாலை விபத்தில் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தியையும்;

நீலகிரி மாவட்டம், கூடலூர் காவல் நிலையத்தில் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. பண்டன் அவர்கள் 16.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகர காவல், கீழ்ப்பாக்கம் மனநல காப்பகம் காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. S.பிரான்சிஸ் அவர்கள் 19.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

பெரம்பலூர் மாவட்ட ஆயுதப் படை பிரிவில் இரண்டாம் நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. N.பாபு அவர்கள் 21.10.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை, பெருநகரக் காவல், வடபழனி காவல் நிலையத்தில் முதல்நிலைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. G.வெங்கடேசன் அவர்கள் 23.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், ஸ்டான்லி மருத்துவமனை காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. G.நேசய்யன் அவர்கள் 27.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

சென்னை பெருநகரக் காவல், வேளச்சேரி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. Y.அந்தோணிராஜ் அவர்கள் 30.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருநெல்வேலி மாவட்டம், சிவந்திப்பட்டி காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராகப் பணி புரிந்து வந்த திரு. N.ரவீந்திரன் அவர்கள் 31.10.2013 அன்று மாரடைப்பால் காலமானார் என்ற செய்தியையும்;

மதுரை மாநகர், சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவில் (Social Justice & Human Rights Unit) முதல்நிலை காவலராகப் பணி புரிந்து வந்த திரு. P.சுரேஷ் அவர்கள் 31.10.2013 அன்று உடல்நலக் குறைவால் காலமானார் என்ற செய்தியையும்;

திருப்பூர் மாவட்டம், உடுமலை காவல் நிலையத்தில் தலைமைக் காவலராகப் பணி புரிந்து வந்த திரு. R.மணிவாசகம் அவர்கள் 1.11.2013 அன்று ஆண்டார்சன்பட்டி அருகே ஏற்பட்ட சாலை விபத்தில் உயிரிழந்தார் என்ற செய்தியையும் அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

காவல் துறை சிறப்பு உதவி ஆய்வாளர்கள் நேசய்யன், அந்தோணிராஜ், ரவீந்திரன்; தலைமைக் காவலர்கள் பிரான்சிஸ், மணிவாசகம்; முதல்நிலைக் காவலர்கள் வெங்கடேசன், சுரேஷ்; இரண்டாம் நிலைக் காவலர் பாபு, காவலர்கள் முத்துக்குமார், பண்டன் ஆகியோரின் அகால மரணத்தால் சொல்லொணாத் துயரத்தில் ஆழ்ந்திருக்கும் அவர்களது குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த காவலர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு:
இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9